7th February 1959]

SRI K. SATTANATHA KARAYALAR: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இப்போது மத்திய சர்க்காருடைய உத்திரவுப் பிரகாரம் அவர்களுக்கும் சமமான கிராண்ட் கொடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இப்போது எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM: மாதம் ஒன்றுக்கு 40 ரூபாய் என்று நினைக்கிறேன். நேற்று அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன்.

Unhealthy localities

* 88 *Q.*—SRI M. K. SOMASUNDARAM (on behalf of Sri T. Thirumaimuthu Veerasakkaya Thiruvenkadasami Naicker): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have declared some of the towns in the State as "unhealthy places";

(*b*) if so, the names of those towns; and

(*c*) the reasons for declaring them as "unhealthy places"?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) The Government have not declared any town in the State as "unhealthy locality" but the following *areas* in the Madras State have been declared as "unhealthy localities".

(*b*) (1) Kollimalais.

(2) Bolampatti Reserves in the Coimbatore district.

(3) The Palamalai Hills in the North Coimbatore Forest Division.

(4) Anaikatti North and South Reserve Forest in the Coimbatore district.

(5) Pillur Gaithaikadu and Gopinari villages in the North Coimbatore Forest Division.

(6) Nellithorai in the Coimbatore district.

(*c*) There is risk of malaria and filaria in these localities.

SRI A. A. RASHEED: Sir, may I know from the Hon. Minister whether these localities have become healthy now?

THE HON. SRI C. SUBRAMANIAM: Not yet, Sir. But, as my Colleague, the Health Minister suggests, they are all becoming healthy.

SRI K. ANBAZHAGAN: துணைத் தலைவர் அவர்களே, சுகாதார நலமற்ற அந்தப் பகுதிகளை சுகாதார நலமுள்ளதாக்க திட்டம் ஏதேனும் உண்டா ? அவைகளை நிறைவேற்ற அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது ?

THE HON. SRI C. SUBRAMANIAM: மலேரியா, பைலேரியா இவைகளை நீக்க இணைக்கப்பட்ட திட்டம் ஒன்று இப்போதும் நடைபெற்று வருகின்றது. அதை இன்னும் விரிவாக்க சர்க்கார் ஆலோசித்து வருகிறது.

SRI N. MARUDACHALAM: கோயம்புத்தூர் ஜில்லாவில் உள்ள போதனூரில் தோல் சாலையிலிருந்து தண்ணீர் வந்து ஹரிஜனங்களுக்கு மத்தியில் நிற்பதால் அவர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். இது சுகாதாரத்திற்கு விரோதமாக இருக்கிறது என்று ரிப்போர்ட் வந்திருக்கிறதா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ?

[7th February 1959

DEPUTY SPEAKER : நீங்கள் கேட்கிற கேள்விக்கும், மூலக் கேள்விக்கும் ஒன்றும் சம்பந்தமில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த சிட்டிகளை மட்டும் சுகாதார நலமற்ற இடங்கள் என்று அரசாங்கம் அறிவித்துள்ளார்கள் என்பதற்குக் காரணம் என்ன ? (அங்கத்தினர்கள் : ஸிட்டி அல்ல, காட்டுப் பிரதேசங்கள்) குறிப்பாக மேஜர் பஞ்சாயத்து, முனிசிபல் ஏரியாக்களிலும் மோசமான, சுகாதார நலமற்ற இடங்கள் இருக்கும்போது, இது போன்ற இடங்களை மாத்திரம் அறிவித்துள்ளது அந்த ஏரியாக்களை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு அறிவித்துள்ளார் களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் என்ன மனதில் வைத்துக் கொண்டு கேட்கிறார்கள் என்று எனக்கு புரியவில்லை. மலேரியா, பைலேரியா உள்ள இடங்கள், இந்த இடங்கள். ஆகையால் இந்த இடங்கள் சுகாதார நலமற்ற இடங்கள் என்று பிரசுரம் செய்திருக்கிறோம். மற்ற இடங்களில் சுகாதாரக் குறைவில்லையா என்று கேட்டால், இருக்கிறது. காட்டுப் பிரதேசங்களைத் தான் குறிப்பிட்டிருக் கிறார்கள்.

SRI K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that of late there is a great invasion and rush of mosquitoes, which are responsible for the spread of diseases like filaria and malaria, into the City of Madras? If so, will the Government declare the City of Madras as unhealthy for human inhabitation?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I think this question should be addressed to my Colleague, the Health Minister and I am sure he will take necessary action.

SRI M. P. PERIASAMI : தலைவர் அவர்களே, கொல்லி மலையில் மலேரியா அதிகமாக இருக்கிறது என்று அறிவிக்கப்பட்டது. இப் போது மருந்து அடித்துக் கொண்டு வருகிறார்கள். இன்னும் எத்தனை வருஷங்களுக்கு இந்த மலேரியா இருக்கும் என்று தெரியுமா ? இன்னும் எத்தனை வருஷங்களில் மலேரியா இல்லாமல் செய்ய முடியும் என்று தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது மலேரியா முழுவதையும் தடுக்க விரிவான திட்டம் ஒன்று யோசிக்கப்பட்டு வரு கின்றது. அது அமுலுக்கு வருமானால் எல்லா இடங்களிலும் கொசுக்கள் ஒழிக்கப்பட்டு விடும். ஏதாவது ஒரு பகுதியில் இப்போது நடவடிக்கை எடுக்கப்படுகிற காரணத்தினால் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு அவைகள் படையெடுத்து விடுகிறது. ராஜ்யம் முழுவதையும் எடுத்துக் கொண்டு, மலேரியாவைத் தடுக்கும் திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

District Gazetteers

* 89 *Q*.—SRI K. RAMACHANDRAN (on behalf of Sri M. Jagannathan) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the work of preparing District Handbooks in the place of the old District Gazetteers has been completed; and

(*b*) if not, the reasons for the delay?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.